முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 980

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

05.06.2022, ஞாயிற்றுக்கிழமை

1. பரபிரம்மமே அரங்கா வாழ்க
பாருலகை காக்க வந்த தேசிகா வாழ்க
வரம்பெற்று என் சக்தியாக
வாழுகின்ற வள்ளலே வாழ்கவாழ்க

2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் வைகாசி மாதம் 22 ம் நாள், 05.06.2022 ஞாயிற்றுக்கிழமை)
வையகத்தில் அரங்கன் தர்மமே பாதுகாப்பாய் நிற்கும்
வரம்பெற்ற அரங்கன் கொள்கையே வையகத்தை வழி நடத்திக்காக்கும்

3. காக்கின்ற மகா சக்தி அரங்கன்
கருணைகொண்டு இறங்கி தர்மத்தை
தேக்கமின்றி உலகோர்க்கு வாரி அருளிவர
தேசிகன் தொண்டு வழி இணைந்தவரெல்லாம்

4. எல்லோரும் ஞானியாவது உறுதியப்பா
எல்லோருக்கும் ஞான ஆட்சிக்கால வாய்ப்புகிட்டி
வல்லமைபட அவர்களெல்லாம் மரணமில்லா
வையகத்தில் மறுமை வென்று சிறக்க நேரும்

5. நேர்மைகொண்டு அரங்கன் தொண்டர்களாகி
நிலவுலகில் ஞானம் பயிலும் அனைவருக்கும்
வறுமை பசி பிணி பிற துன்பங்கள்
வாராத பாதுகாப்பு மிகுதி தந்து

6. தந்துமே ஆறுமுகப்பெருமான் யான்
தவமாக தர்மமாக தரணியில் சர்வ சூட்சுமமாக கலந்து அருள்புரிவேன்
அருளாக அரங்கன் சக்தியாக அகிலத்தில் எந்த கிளைகளெல்லாம்
ஆற்றல்பட ஞானிகள் பூஜை செய்து வருகின்றனரோ

7. வருகின்ற கிளைகள் அனைத்துமே
வருமுலகில் ஞான சபையாக மாறி
வையகத்தை வழி நடத்தும்
மகா சக்தி ஆகும்

8. ஆகவே கிளைகள் என அமைத்து
அரங்கன் பேரில் உயர் சேவை
பிழையற தொடரும் அன்பர்கள் அனைவருமே
பிரபஞ்சத்தில் ஞானியாவது உறுதிஉறுதி

9. உறுதி தந்தேன் இன்று அரங்கன்பால்
வரமாக உயர்தொண்டர்கள் வாராந்திரம் அரங்கனை சேவித்து
கருதியே தர்மத்தில் பொருளுதவி செய்து
அரங்கன் கரம்பட ஞானதீட்சை ஏற்க

10. ஏற்பவர்க்கெல்லாம் சித்தி உறுதிஉறுதி
ஏற்று ஞானவழி தொடருபவரெல்லாம்
அற்புதம் கூடி இந்த கலியுகத்தில்
ஆவரப்பா அரங்கன் வழி ஞானிகளாக ஞான அறிவுரை ஆசி முற்றே.

–சுபம்–

மகான் முருகப்பெருமானால் உலக நன்மைக்காகவே அமைக்கப்பட்டதுதான் துறையூர் ஓங்காரக்குடில்.

துறையூர் அகத்தியர் சன்மார்க்க சங்கத்திற்கு தொண்டு செய்தாலோ, பொருளுதவி செய்தாலோ அவர்களுக்கு ஞானம் சித்திக்கும் என்பது உலக ஞானத்தலைவன் மகான் முருகப்பெருமானின் அருள் வாக்காகும்.

பற்றற்ற வேலவன் பதமலர் பற்றிட
பற்றற்ற வாழ்வும் பரகதியும் கூடுமே.

மனமாயை அற்ற மாதவ வேலனை
இனமாக போற்றிட இன்பம் உண்டாம்.

ஆற்றலாம் வேலவன் அருளினைப் போற்றிட
ஏற்றமே வாழ்வில் இன்பம் உண்டாம்.

நாட்டமாம் வேலனை நாளும் போற்றிட
வாட்டமும் இல்லை மனமும் செம்மையே.

எந்தை வேலவன் இணையடி பற்றிட
சிந்தையும் தெளிய சிவபதம் சேர்வர்.

காலனை வெல்ல கடுந்தவம் வேண்டுமோ?
வேலனை போற்றிட வெற்றியும் உண்டாம்.

மணிவாசக பெருமானின் மலரடி போற்றிட
அணிமா சித்தும் அருள்வார் நலமே.

எந்தை சம்பந்தன் இணையடி போற்றிட
சிந்தையும் தெளிய சிவமது ஆவாரே.

அம்மை வள்ளலார் அருளினைப் போற்றிட
நம்மையும் காத்து நாட்டையும் காப்பார்.

நந்தனார் திருவடியை நாளும் போற்றிட
வந்திடும் நல்வாழ்வு வளமே.

திருமூலர் திருவடியை தினமும் போற்றிட
கருமூலங் கடக்க காட்டுவார் நலமே.

ஓரைந்தும் ஆறும் ஓதிய புகழுரை
ஈரைந்தும் ஒன்றாய் இயம்பினார் ஈசனே.

– முருகனடிமை ஆறுமுக அரங்கமகா தேசிகர்.